JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 85/2020 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | முத்துக்குமார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 09.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எதிரிகள் முகைதீன் பிச்சை என்ற மைதீன், ஆதாம் இப்ராகீம், அப்துல் அலி ஆகியோர்களை தெரியும். சண்டை நடந்த போது நான் பார்த்தேன். அசா.1 உதுமான் முகைதீன் என்பவரை தெரியும். ஆட்டோவில் என்னுடைய கஸ்டமராக வந்தார். சாட்சி அல்லா பிச்சை என்பவரை தெரியும். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு காலை 10 மணிக்கு கடையநல்லூர் யூனியன் ஆபிஸ் தென்புறம் இப்ராகீம் நகரில் அசா.1 உதுமான் மைதீன் ஆட்டோவில் வந்து அவருடைய நிலங்களை பார்த்த போது பக்கத்தில் உள்ள நபர்கள் கட்டிடம் கட்டும் போது அசா.1 ன் நிலத்தில் ஒரு 5 அடி கட்டி உள்ளார்கள். அசா.1 பக்கத்தில் கட்டிடம் கட்டும் நபர்களிடம் அளந்து கட்டினீர்களா என்று கேட்டு கொண்டிருந்த போது அடுத்த மனைக்காரர்களான நபர்கள் அசா.1 யிடம் தேவுடியா பயலே, கிழட்டுப்பயலே நீ போ என அசிங்கமாக பேசினார்கள். அவ்வாறு பேசும் போது நானும் இருந்த சமயம் அசிங்கமாக பேசினார். சாட்சி தற்போது அந்த

நபர்கள் பெரியவரை அவ்வாறு பேசியதால் அங்கு நின்று கொண்டிருந்த எனக்கு அசிங்கமாக இருந்தது எனக் கூறுகிறார். பின்னர் அசா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலிஸார் என்னிடம் பெயர் எல்லாம் கேட்டு விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 85/2020 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | உதுமான் முகைதீன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 09.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பேராசிரியராக வேலை செய்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். எதிரிகள் முகைதீன் பிச்சை என்ற மைதீன், ஆதாம் இப்ராகீம், அப்துல் அலி ஆகியோர்களை தெரியும். என்னுடைய இடத்தில் எதிரிகள் தகராஜ செய்தார்கள். சாட்சி முத்துக்குமார், அல்லா பிச்சை ஆகியோர்களை தெரியும்.30.05.2018 ம் தேதி காலை 10.00 மணிக்கு கடையநல்லூர் இப்ராகீம் நகர் என்னுடைய 52 வது பிளாட் இடத்தில் நானும், குமாரும் சென்ற போது அங்கு எதிரிகள் மூவரும் இருந்தார்கள், அவர்கள் என்னுடைய இடத்தின் கம்பி வேலிகளை எல்லாம் அகற்றி கொண்டு இருந்தார்கள். அங்கு நான் சென்று எதிரிகளிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு மிகவும் தேவுடியா கூதி மவனே ஏன் இங்கு வந்தாய் என தவறான வார்த்தைகளை பயன்படுத்தினார்கள். அவர்கள் அவ்வாறு என்னை பேசியதால் நான் மிகவும் அதிர்ந்து போனேன். அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் என்னுடைய கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்தியது. மீண்டும் மேலும் எதிரிகள் என்னுடைய இடத்தில்

பள்ளம் தோண்டி அவர்கள் கொண்டு வந்த கம்பியினை அந்த பள்ளத்தில் ஊன்றுவதற்கு வேலை செய்தார்கள். இவ்வாறு ஏன் செய்கீறிர்கள் என்று நான் கேட்ட போது கிழட்டு பயலே ஏன் இங்கு வந்தாய், ஒழுங்காக இந்த இடத்தை விட்டு ஓடி விடு இல்லாவிட்டால் உன்னை கொன்று விடுவோம் என்று சொன்னார்கள். பேரதிர்ச்சி அடைந்தேன். நிலை தடுமாறிய சூழல் எனக்கு ஏற்பட்டது. மூத்த குடிமகனாகிய எனக்கு பதட்டமும், உள்ள, உடல் வலியும் எனக்கு தோன்றிது. நிற்க முடியாத நிலையில் இருந்தேன். பின்னர் கடையநல்லூர் காவல்நிலையம் சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi